NATIONAL LIBRARY OF SRI LANKA

N L S L

# புதிய வெளியீடுகள் கொள்வனவுத் திட்டம் - 2026

வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

**விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்**

01. 2024/ 2025/ 2026 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட புத்தகங்கள் மட்டுமே இத் திட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும். புத்தகத்தில் வெளியிடப்பட்ட ஆண்டு தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

02. புத்தகத்தின் முதல் அச்சு மட்டுமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பத்துடன் புத்தகத்தின் நகலை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இத் திட்டத்தின் கீழ் ஒரு ஆசிரியரால் அதிகபட்சம் 02 புத்தகங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

04. ஆசிரியர்/ஆசிரியர்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர் மட்டுமே விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்களின் வெளியீடாக இருந்தால், அனைத்து ஆசிரியர்களும் கூட்டாக விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும், மேலும் அவர்களில் ஒருவர் பணத்தினைப் பெறுவதற்குப் பரிந்துரைக்கப்படல் வேண்டும்.

05. சமர்ப்பிக்கப்படும் புத்தகம் குறைந்தபட்சம் 49 பக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். புத்தகத்தின் வடிவமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலை வடிவமைப்பின் படி இருத்தல் வேண்டும். சிறுவர்கள் புத்தகம் குறைந்தது 16 பக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

06. புத்தகத்தில் ISBN/ISMN இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும் (இவ்விலக்கம் இல்லாத அல்லது தவறான அல்லது பொருத்தமற்ற இடங்களில் அச்சிடப்பட்ட புத்தகம் நிராகரிக்கப்படும்)

07. மறுபதிப்புகள், சிறுவர் புத்தகங்கள், பரீட்சை நோக்கத்திற்காக எழுதப்பட்ட புத்தகங்கள் அல்லது பாடப்புத்தகங்கள் இந்த திட்டத்திற்கு பரிசீலிக்கப்பட மாட்டாது.

08. புத்தகத்தின் உள்ளடக்கம் ஒரு குறிப்பிட்ட மதம், அரசியல் தத்துவம், ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகக் குழுக்கள் அல்லது நெறிமுறைகளை நேரடியாகத் தாக்கக்கூடாது.

09. அது விளம்பரங்கள், வணிக வெளியீடுகள், நினைவுப் பொருட்கள் அல்லது அரச, அரச சாரா அமைப்பு அல்லது வேறு எந்த அமைப்பாலும் வெளியிடப்பட்ட அல்லது நிதியுதவி செய்யப்பட்ட வெளியீடாக இருத்தல் கூடாது.

10. புத்தகத்தின் விலை புத்தகத்தில் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் நூலாசிரியர்களுக்கு உதவுவதாகும், எனவே இத்திட்டத்தின் கீழ் பரிவர்த்தனைகள் அந்த அந்த புத்தகத்தின் ஆசிரியர்களுடன் பிரத்தியேகமாக நடத்தப்படும்.

12. புத்தகத்தின் ஆசிரியர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றால் பெற்றோர் அல்லது பாதுகாவலர் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

13. இத் திட்டத்திலிருந்து உதவி பெறுபவர்களிடமிருந்து 20% தள்ளுபடியும் 2% சேவை கட்டணமும் வசூலிக்கப்படும்.

14. ஒரு புத்தகத்தை ஒரு திட்டத்திற்காக ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது குறித்த இறுதி முடிவை எடுக்கும் உரிமையை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கொண்டுள்ளது.

15. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது, மக்கள் வங்கி, கொழும்பு நகரமண்டபக் கிளையின் 167-1-001-6-3170315 என்ற தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கணக்கு எண்ணுக்கு 100.00 ரூபாயை வரவு வைக்க வேண்டும், மேலும் தொடர்புடைய விண்ணப்பத்தையும் புத்தகத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**முகவரி** : வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
இல 14, சுதந்திர வழி, கொழும்பு 07.

**தொலைபேசி** : 011-2687583

**இணையத்தளம்** : www.natlib.lk

**மின்னஞ்சல்** : isbnsrilanka@mail.natlib.lk